(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 99.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2021 ஒக்டோபர் 07, வியாழக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

289/2020

கௌரவ புத்திக பத்திரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பாகிஸ்தான் போன்ற நாடுகளில் வெற்றிலைக்கு அதிக கேள்வி நிலவுகின்றதென்பதையும்;

(ii) ஏற்றுமதி பயிராக வெற்றிலையை விரிவாக்குவதற்கு பொருத்தமான சூழல் இலங்கையில் காணப்படுகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வெற்றிலைச் செய்கையை இலங்கையில் விரிவாக்குவதற்கு இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வெற்றிலை ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ஒவ்வொரு ஆண்டுக்கமைய எவ்வளவென்பதையும்;

(ii) வெற்றிலை ஏற்றுமதி மூலமான வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

311/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை உலக சந்தையில் எரிபொருளின் விலை உயர்வடைந்த மற்றும் குறைவடைந்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) குறிப்பிட்ட விலை மாற்றங்களுக்கு ஒப்பீடாக இலங்கையில் எரிபொருளின் விலையைத் திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்ததன் நன்மையை இலங்கையின் பாவனையாளர் மக்களுக்கு வழங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

466/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையில் உருவாக்கப்பட்ட புதிய தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையின் தொழிலின்மை விகிதம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேற்படி காலப்பகுதியில் ஏற்பட்ட தொழிலின்மை விகிதத்தின் வேறுபாடு யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கையின் நீண்டகால உற்பத்தி இயலளவில் நிகழ்ந்த வேறுபாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

514/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக புதிய சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கை தொடர்பாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கை தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

644/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களை வெள்ளப்பெருக்கிலிருந்து பாதுகாப்பதற்கு இன்றளவில் வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்களை வெள்ளப்பெருக்கிலிருந்து பாதுகாப்பதற்கு வேறு திட்டங்கள் இருப்பின், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

649/2020

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் அக்மீமன தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள வட்டரெக்க, ஹீன்பெந்தல, கலேகான, மாம்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் வசிக்கின்ற மக்களில் சுமார் 80% பேர் தமது வாழ்க்கைத் தொழிலாக செதுக்குக் கலையில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும்;

(ii) கொவிட்-19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக ஏற்பட்டுள்ள சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியானது மேற்படி செதுக்குக் கலைஞர்களின் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) காலி மாவட்டத்தில் வசிக்கின்றவர்களும் தமது வாழ்க்கைத் தொழிலாக செதுக்குக் கலையில் ஈடுபட்டுள்ளவர்களுமான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கையானது பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி செதுக்குக் கலைஞர்களின் வாழ்க்கை நிலைமையினை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

948/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தின், பிரதேச சபை அதிகாரப் பிரதேசமொன்றான நெடுந்தீவின் பிரதான போக்குவரத்துப் பாதையாக கடல்வழிப்பாதை அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தீவில் இயங்கி வருகின்ற 'நெடுந்தாரகை' எனும் பயணிகள் போக்குவரத்துப் படகில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலரினதும் பதவி, நியமனத் திகதி மற்றும் சேவை அடிப்படை என்பன தனித்தனியே யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அலுவலர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்கள் யாரால் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) வில்லியம் ஜேசுதாசன் அன்ரனி ராஜ், சிந்தாகுலம் மெல்கியாஸ் மிலன், அல்பிரட் மரியதயாளன், அன்ரனி அமலதாஸ், அன்ரூஸ் ரகீம்லயோன் ஆகிய அலுவலர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் அடிப்படையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

988/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு நகரில் சில பிரசேதங்களில் கம்பி வடங்களைப் பயன்படுத்தி மின்சார இணைப்பு வழங்கப்படுகின்றது என்பதையும்;

(ii) இந்த இணைப்பினை வழங்குவதற்காக இலங்கை மின்சார சபை அதிகூடிய நிதியை அறவிடுகின்றது என்பதையும்;

(iii) இப்பணத்தொகையை குறைந்த வருமானம் பெறுவோருக்கும் நடுத்தர குடும்பத்தினருக்கும் தாங்கிக்கொள்வது சிரமம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறைந்த வருமானம் பெறுவோரதும் நடுத்தர வகுப்பினரதும் வீடுகளுக்கு சலுகை விலையில் மின்சார இணைப்பினை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படுமா;

(ii) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாது;

(iii) இன்றேல், அவர்களுக்கு சலுகை விலையில் மின்சார இணைப்புக்களை வழங்கக்கூடிய மாற்று வழிமுறைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1403/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளில் நிறைவு செய்யப்பட்ட பகுதியின் நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதனை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பரா?

(ஆ) (i) கடந்த அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டிருந்தவாறு மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது தொடர்பில் தெளிவுபடுத்த முடியுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்ற இடங்களில் ஏலவே திட்டமிடப்பட்டவாறு தூண்கள் மீது இந்த சாலை நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(ii) திட்டமிடப்பட்டவாறு இன்றளவில் இந்த சாலையின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

1830/2021

கௌரவ சாமர சம்பத் தசநாயக,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக கடந்த அரசாங்கத்தில் ஆளும் தரப்பைப் பிரதிநிதித்துவம் செய்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி செலுத்தலுக்கு சட்டரீதியான அடிப்படை உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவைச் செலுத்திய அமைச்சின்/அலுவலகத்தின் பெயர் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நடப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேற்படி கொடுப்பனவைச் செலுத்துவதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் இன்றளவில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீடு,— 2022 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும்; அந்நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்த சில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாட்டைச் செய்வதற்கும்; அத்தகைய செயற்பாடுகளின் மீதான செலவினத்திற்கு அந்நிதியாண்டின் போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய அல்லது அதன் கையாளுகையிலுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்கள் என்ற வகையாக கொடுப்பனவை இயலச் செய்வதற்கும்; திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

நீதி அமைச்சர்,— இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தம்),— (25 ஆம் அத்தியாயமான) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

3.

நீதி அமைச்சர்,— தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்),— (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

4.

கௌரவ வேலு குமார்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"யூஎன்வீ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ இம்ரான் மஹ்ரூப் ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அக்குறணை பைதுஸ் ஸகாத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

தொழில் அமைச்சர்,— ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2021.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

கைத்தொழில் அமைச்சர்,— தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 14(1)(ஊ) மற்றும் 15 ஆம் பிரிவுடன் உடன் வாசிக்க வேண்டிய, 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டு, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 53 இன் கீழ் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2221/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நீதி அமைச்சர்,— குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 214 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 840 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 யூலை 02 ஆம் திகதிய, 2234/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2021 யூலை 08) [1].

* 9.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 06 ஆம் திகதிய 2226/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

11.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---